# புதிய தலைவர்களை உருவாக்கிய ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் M1b யைப் படிக்கவும்.

**ஜெபம்:** “பரலோகத்தில் இருக்கும் பிதாவே, புதிய தலைவர்களை உருவாக்க எனக்கு உதவி செய்யும். அவர்கள் சேவை செய்யும் மக்களுக்கு போதிப்பதில் அவர்களுக்கு உதவி செய்ய உதவியருளும். நான் போதித்து உருவாக்கும் தலைவர்கள் மேலும் புதிய தலைவர்களை பயிற்றுவிக்க உதவி செய்யும். இதனால் இந்த உலகத்தில் உள்ள உமது இராஜ்யம் தொடர்ந்து பெருகட்டும்.”

1. **பிறருக்கு போதனை செய்ய தேவ வார்த்தையால் உங்கள் இருதயத்தை ஆயத்தம் செய்க.**

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் எவ்வாறு அப்பொல்லாவை போதித்து உருவாக்கினார்கள் என்பதை அப். 18:24-28ல் **காண்க.**

- எப்போது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் அப்பொல்லோவுக்கு அறிவுரை கூறினர். அவனது தேவைகளை அறிந்து கொள்ளும் முன்னரா? அல்லது பின்னரா?
- அப்பொல்லோவின் தேவைகளை கவனமாகக் கேட்டறிந்த பின் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் அவனுக்கு எங்கு வைத்து அறிவு போதித்தனர்?
- தங்கள் வீட்டில் வைத்து ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் அறிவுபோதித்த பின் அப்பொல்லோ என்ன செய்தான்? (வச.27 & 28).
- இயேசுவுக்கு ஊழியம் செய்ய ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் ஒரு குழுவாகப் பணி புரிந்தனர். உங்கள் மந்தையிலும் திருமணமான தம்பதியினர் இணைந்து ஊழியம் செய்வதற்கு உதவ நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

தலைவர்களை இரு வகையில் பயிற்றுவியுங்கள்.

1) கூட்டத்திற்கு போதிக்கும் போது இயேசு செய்தது போல ஒரு குழுவினரிடம் பேசுதல்.

2) அப்போஸ்தலர்களை ஆயத்தம் செய்தபோது இயேசு செய்தது போல ஒரு சிறு குழுவிற்கு அறிவுபோதித்தல்.

இந்த இரண்டு பயிற்சி முறைகளையும் சமநிலையில் வைத்துக்கொள்ளவும்.

- புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் போல் புதிய தலைவர்களுக்கும் புதிய சபைகளுக்கும் அவசரத் தேவைகள் உண்டு. கொஞ்சம் அனுபவம் வாய்ந்தவர்கள் அவர்களுக்கு அறிவு போதனை செய்ய வேண்டும்.
- வளர்ந்த சபைகளுக்கும் முதிர்ந்த தலைவர்களுக்கும் இத்தகைய கவனம் தேவையில்லை. இயேசுவைப் போல பவுலும் தன்னுடைய தொடர்ந்த உதவி இல்லாமலேயே தங்கள் சேவையை செய்யக்கூடியவர்களுக்கு தமது அறிவுபுகட்டலை நிறுத்தி விடுவதைப் பார்க்கிறோம்.
- தேவைப்படுபவர்களுக்கு பணிமனைகளையும் (Work shops) குறுகிய கால பாடங்களையும் வழங்குங்கள். ஆனால் இது புதிய தலைவர்களின் எல்லாவிதமான தேவைகளையும் பூர்த்தி செய்யாது. இயேசுவானவரும் பவுல் அப்போஸ்தலரும் தங்களிடம் பயின்றவர்களுக்கு பயிற்சியளித்தது போலவே அறிவுபோதியுங்கள்.
- ஒரு தலைவர் இன்னொரு தலைவருக்கு எவ்வாறு அறிவு போதனை செய்கிறார்? செய்ய வேண்டிய இந்த ஏழு காரியங்களை மனப்பாடம் செய்க.
- குழுவை சிறியதாக வைத்துக் கொள்ளவும். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் உதவி செய்ய நீங்கள் தனித்தனியாக நேரம் ஒதுக்க வேண்டும்.

- மேய்ப்பனின் திறமைகளை முன் மாதிரியாகக் காட்டவும். இது பார்த்து அது போல் செய்ய எளிதாய் இருக்கும்.
- பயிற்சிபெறும் ஒவ்வொருவரின் அறிக்கையையும் கவனமாகக் கேட்கவும். பயிற்சிபெறும் ஒவ்வொருவரும் கடந்த கூட்டத்திற்கும் இந்த கூட்டத்திற்கும் இடையில் நடைபெற்ற காரியங்களையும், தங்கள் தேவைகளையும் அறிக்கையாகத் தர வேண்டும்.
- பயிற்சி பெறும் ஒவ்வொருவரும் செயல்பாடுகளைத் திட்டமிட உதவவேண்டும். தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவரும் அவரது மந்தையும் என்ன செய்யப் போகின்றனர் என்பதை எழுதட்டும். புதிய ஏற்பாட்டின்படியானதும், இன்னும் குறைவானதாக இருப்பதும், பலவீனமானதாக இருப்பதுமான செயல்களை வளர்க்கவும். எதிர்மறையான பிரச்சினைகளில் அதிக நேரத்தை செலவிட வேண்டாம். ஒவ்வொரு அறிவு போதனைக் கூட்டத்திலும் ஏதோ ஒன்றைப் புதிதாக சேர்க்கவும். அது புதிய சபையை கட்டுவதாக இருக்க வேண்டும்.
- பயிற்சி பெறுபவர்கள் என்ன வாசிக்கின்றனர் என்பதைக் கூறுமாறு கேட்கவும். கடந்த காலத்தில் கொடுக்கப்பட்ட பாடத்தை வாசித்து அவர்கள் கற்றுக்கொண்டது என்ன?
- புதிதாகப் படிக்க வேண்டியவற்றை நிர்ணயம் செய்யுங்கள். கைவசம் இருக்கின்ற பாடப் பட்டியலை கவனமாக நோக்கவும். ஒவ்வொரு மாணவனின் திட்டத்திற்கும் பொருத்தமானதைத் தேர்ந்து எடுக்கவும். பயிற்சிபெறும் யாவரும் ஒரே பாடத்தையே படிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.
- ஒவ்வொருவருக்காக ஜெபிக்கவும். வழிகாட்டுதலுக்காகவும் வல்லமைக்காகவும் ஜெபிக்கவும். நீங்கள் சேவை செய்யும் மக்களுக்காகவும் ஜெபிக்கவும்.

**வேதாகமத்தில் உள்ள அறிவு போதனை சங்கிலி** (யாருக்கு யார் அறிவு போதனை செய்தார்கள் என்பதை அம்புக்குறி காட்டுகிறது).

**எத்திரோ → மோசே, → இஸ்ரவேலின் மூப்பர்கள்,** இஸ்ரவேல் ஜனங்களை மேய்த்தவர்கள்.

**மோசே → யோசுவா,** வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நிலத்தைக் கைப்பற்ற இஸ்ரவேல் வீரர்களுக்கு உத்தரவிட்டவன்.

**தெபோராள் → பாராக்,** விக்கிரக ஆராதனையாளர்களான கானானியர்களை தோற்கடிக்க இஸ்ரவேல் வீரர்களை வழிநடத்தியவன்.

**ஏலி → சாமுவேல் → சவுல் அரசன் மற்றும் தாவீது இராஜா**

**நாத்தான் → தாவீது → சாலொமோன் → ஷீபாவின் இராணி**

**எலியா → எலிசா → யோவாஸ் இராஜா**

**தானியேல் → நேபுகாத்நேச்சார்**

**மொர்தெகாய் → எஸ்தர்**

**இயேசு → அவரது அப்போஸ்தலர்கள் → புதிய சபைகளின் மூப்பர்கள்**

**பிலிப்பு → எத்தியோப்பிய அதிகாரி**

**பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும் → அப்பொல்லோ**

**பவுல் → தீமோத்தேயு → ì விசுவாசிகள்,î → ì பிறர்î** (2 தீமோ 2:2)

2. **இந்த வாரத்தில் செய்ய வேண்டிய காரியங்களை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

- உங்கள் மந்தையில் தலைவராகப் பணியாற்ற கூடியவர்களுக்கு பயிற்சி ஆரம்பிக்க வேண்டியதாக இருக்குமானால் அத்தகைய விசுவாசிகளை சந்திக்கவும். அவர்களைத் தொடர்ந்து சந்தித்து அறிவு போதனை செய்யும் பயிற்சியாளர் ஒருவரை ஏற்பாடு செய்யவும்.
- உங்கள் பகுதியில் உள்ள வேறு சபைகளின் தலைவர்களுக்கு போதனை தேவைப்படுமாயின் அவர்களை சந்தித்து ஏற்பாடு செய்யவும்.

- எந்த வகையிலாவது அறிவுரைத் தேவைப்படும் விசுவாசிகள் அல்லது நண்பர்களை சந்திக்கவும். அவர்களது தேவைகள் பற்றியும், சேவை செய்யும் வாய்ப்புகள் பற்றியும் கேட்டு அறிந்து கொள்ளவும்.

**3. வரும் ஆராதனை வேளை குறித்து உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

தேவைக்கும் வட்டார பழக்க வழக்கங்களுக்கும் **பொருத்தமான நடிவடிக்கைகளைத்** தெரிந்து கொள்க. புதிய தலைவர்களுக்கும் உதவி தேவைப்படுபவர்களுக்கும் போதனை செய்ய வல்லமைக்காக ஜெபிக்கவும்.

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அப்பொல்லோவுக்கு எவ்விதம் போதித்தனர் என்பதைக் **கூறவும் அல்லது நடித்துக் காட்டவும்.** அதைப்பற்றி நீங்கள் பகுதி 1 ல் அறிந்து கொண்டவைகளை விவாதிக்கவும்.

இரண்டு வகையான பயிற்சிகளையும் சமநிலையில் கையாளுவது (பகுதி 1 ல் இருந்து) எவ்வாறு என்பதையும், பிறருக்கு போதனை செய்தவர்களைப் பற்றி வேதாகமத்தில் இருந்தும் (பகுதி) **விளக்கவும்.**

**பவுல்–தீமோத்தேயு அறிவு போதனை சங்கிலியை செய்து காட்டுக (Paul-Timothy mentoring chain).**

- எல்லோரும் எழுந்து நின்று நான்கு குழுக்களை அமைக்கவும். இவை ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாதவை. ஒவ்வொரு குழுவும் தனித்தனி நகரம் என்று விளக்கவும்.
- 2 தீமோ 2:2 ஐ வாசிக்குமாறு யாரிடமாவது கூறவும். பெருகும் புதிய சபைகளின் சங்கிலித் தொடரில் இந்த வசனம் நான்கு இணைப்புகளைக் காட்டுகிறது என்பதை விளக்கவும்: 1) அந்தியோகியாவில் பவுல் 2) எபேசுவில் தீமோத்தேயு 3) கொலோசுவில் இருந்த "உண்மையுள்ளவர்கள்" 4) லவோதிக்கேயாவில் வாழ்ந்த "பிறரும்"

1. அந்தியோகியா. அந்தியோகியாவில் இருந்து பவுலும் பர்னபாவும் முதன் முதலில் தேவ வார்த்தையை எடுத்துச் சென்றனர். முதல் குழுவில் இருந்து இரண்டாவது குழுவிற்கு ஒரு வேதாகமத்தை எடுத்துச் செல்லுமாறு (எபேசு) இருவரிடம் கூறவும்.
2. எபேசு. பவுல் தீமோத்தேயுவுக்கு போதித்தார். அவனைப் பவுல் தேவ பணிகளை ஆற்றுமாறு எபேசுவில் விட்டுச் சென்றார்.
3. கொலோசெ. "உண்மையுள்ளவர்களை" தீமோத்தேயு போதித்து பயிற்றுவித்தார். இவர்கள் எப்பாப்பிரா உட்பட எபேசுவிலும் கொலோசெயிலும் இருந்த மூப்பர்கள் (கொலோ 1:1-8).
4. லவோதிக்கேயா. லவோதிக்கேயாவில் உள்ள பிறருக்கும் கொலோசெயாவின் எப்பாப்பிரா போதித்தார் (கொலே. 4:12-13).

எத்திரோ, மோசேக்கு எவ்வாறு அறிவு புகட்டினார் என்பதைக் *கூறவும்* அல்லது நடித்துக் காட்டவும், யாத். 18.

சமீபத்தில் விசுவாசிகள் தாங்கள் போதித்தது பற்றிய **அறிக்கையை** அளிக்கவும்.

பிள்ளைகளை அவர்கள் தயாரித்த கவிதை மற்றும் **நாடகத்தை வழங்குமாறு கூறவும்.**

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களில்** திட்டங்களை விவாதிக்கவும். ஜெபித்து, அறிவு போதனை செய்தலை திட்டமிட்டு, ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும்.

எலியா எவ்வாறு எலிசாவிற்கு போதித்தான் என்பதைப் பிள்ளைகள் நாடகமாக்கட்டும். நாடகத்தைப் பற்றி தயாரிக்கப்பட்ட கேள்விகளை **பிள்ளைகள்** பெரியவர்களிடம் கேட்கலாம்.

ரோமர் 16:3-5 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்தவும். ரோமாபுரி, எபேசு (1 கொரி. 16:19) மற்றும் ஒரு வேளை கொரிந்துவிலும் கூட ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் தங்கள் வீட்டில் சபைகள் கூட உதவி செய்து தாங்கினர் என்பதை விளக்கவும். அப்போஸ்தலர்களின் காலத்தில் விசுவாசிகள் எங்கு கர்த்தரின் பந்தியை ஆசரித்தனர் என்பதை இது நமக்கு ஞாபகப்படுத்துகிறது. அவர்கள் சிறிய குழுக்களில் அப்பம் பிட்டனர். இங்கு ஒருவருக்கொருவர் நெருங்கிய ஐக்கியம் இருந்தது.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net.